

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் அருகே நாச்சியார்கோவில், திருச்சேறை, கூகூர், அழகாபுத்தூர் மற்றும் திருநறையூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 20 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிகளை முன்னாள் எம்.பி. ராமலிங்கம் முன்னிலையில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் கூகூர் அம்பிகாபதி, சரவணன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சுபா திருநாவுக்கரசு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சங்கர், மாத்தூர் நவநீதகிருஷ்ணன், பந்தி சுரேஷ், செம்மங்குடி பாஸ்கர் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கரூர் வருகை தரும் துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

கரூர், ஜூலை 8 –

கழக மற்றும் அரசு விழாக்களில் பங்கேற்க கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கரூர் வருகை தருவதை முன்னிட்டு அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது என கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 06.07.2025 அன்று கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) கரூர் மாவட்ட அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கரூர் வருகை புரிவதை யொட்டி இன்று (8.7.2025) இரவு 7 மணிக்கு குளித்தலை பேருந்து நிலையம் முன்பு கரூர் மாவட்ட தி.மு.க சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பதென இக்கூட்டம் தீர்மானி க்கிறது.

கரூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கோவை ரோடு, பிரேம் மஹாலில் 9ம் தேதி நண்பகல் 12மணிக்கு நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். மேற்கண்ட அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



கரூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் 09.07.2025 அன்று மாலை 4.30 மணிக்கு கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையம் அருகில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் மண், மொழி, மானம் காத்திட, "ஓரணியில் தமிழ்நாடு" புதிய உறுப்பினர் சேர்க்கை பணியினை கரூர் மாவட்டத்தில் உள்ள 1055 வாக்குச்சாவடிகளிலும் கழக நிர்வாகிகள் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று கழகத் தலைவர் அவர்களின் சாதனைகளை எடுத்துக்கூறி புதிய உறுப்பினர் சேர்க்கை பணியினை சிறப்பாக செய்து வரும் அனைத்துகழகநிர்வாகிகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறது.

கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 1055 பூத்துகளுக்கு உட்பட்ட BLA2. BLC, BDA, பூத் இளைஞர், பூத் மகளிர் ஆகியோர் அடங்கிய பூத் கமிட்டி நிர்வாகிகள் 16,000 பேர் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் நாளை (09.07.2025) மாலை 5.00 மணிக்கு ராயனூர் தளபதி திடலில் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் கழக இளைஞர் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். மிக எழுச்சியோடு நடைபெற உள்ள இக்கூட்டத்தை மிகச்சிறப்பாக நடத்திடவும், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இக்கூட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி. ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பி.வி. பரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ். ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வ ரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், என்.ராமலிங்கம், பி.சிவகாம சுந்தரி,

கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், வடக்கு பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப. முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம். ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ண ராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவி ராஜா,

கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாக ராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர் Ex.MLA, தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராய புரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம் பி.காமராஜ் , கீதா மணிவண்ணன் எஸ்.காமராஜ்,ஏ.அறிவழகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# திருவாரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை திறந்து வைக்கிறார்!

திருவாரூரில் மையப்பகுதியில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிரமாண்ட சிலை, திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டு, அந்த சிலை திராவிட நாயகர், தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நாளை (09.07.2025 ) திறப்பு விழா காண்கிறது ! தமிழ் கூறும் நல்லுலகில் தமது 14வயதில் புலிக்கொடி ஏந்தி ,மொழி காக்கும் போராட்டத்தை துவக்கி தனது 92வயது வரை வாழ்நாள் போராளியாகவே வாழ்ந்து, கோடானு கொடி மக்களின் இதயங்களில் வாழும் கலைஞர் அவர்கள் தோன்றியதால் பெருமை பெற்றது இந்த திருவாரூர் !

அவராலேயே இந்த திருவாரூர் மாவட்டமாக உருவாக்கப்பட்டதால் மேலும் சிறப்புற்றது! கல்லூரிகள், கட்டமைப்பு வசதிகள், ஓடாத ஆழிதேரை ஓடவைத்த பெருமை , அந்த தேரோட கான்க்கிரீட் சாலைகள் அமைத்தசிறப்பு , புதைவட மின் பாதைகள் தந்து, பிரமாண்ட மாவட்ட ஆட்சியர் வளாகம், நீதிமன்ற வளாகம், அனைத்து வசதிகளுடனான மருத்துவக்கல்லூரி மருத்துவமனை , மத்திய பல்கலை கழகம் இப்படி திருவாரூரை உலக அரகில் அடையாளப்படுத்தி , காட்டூரில் கலைஞர் கோட்டமாக உயர்ந்து நிற்கும் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை நாளை (09.07.2025) முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

உலகிற்கு திருவாரூரை அடியாளப்படுத்திய கலைஞர் அவர்களின் சிலை அதன் அமைப்பால், சுற்றி எழுப்பப்படும் மணி மண்டபத்தால் , உயர்ந்தோங்கி நிற்கும் கம்பீரத்தால் திருவாரூருக்கு மட்டுமல்ல , ஒட்டுமொத்த தமிழ் நாட்டிற்கே அடையாளமாக உயர்ந்து நிற்க போகிறது என்பதில் ஐயமில்லை !



தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தலைமையில், தர்மபுரி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்,மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன் முன்னிலையில் தர்மபுரி நகர கழக செயலாளர் நாட்டான் மாது ஏற்பாட்டில் 27 வது வார்டு பூத் 149ல் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை இல்லம்தோறும் நடைபெற்றது. உடன் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, வே.தங்கமணி, முல்லைவேந்தன், ரஹிம், அசோக்குமார், உதயசூரியன், நகர நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், BLA2, BLC, BDA, உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையியின் படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள பாக நிலை முகவர்கள் BLA 2 மற்றும் BDA முகவர்கள் ஆய்வுக்கூட்டம் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் , நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர், சட்டமன்றத் தொகுதி மேலிட பார்வையாளர் அன்பரசன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## ஓரணியில் தமிழ்நாடு!


# தண்ணீர் விட்டா வளர்த்தோம் தமிழினத்தை?

இந்திய துணைக் கண்டத்தில் சுதந்திரத்திற்கு முன்னும், பின்னும் தங்களுக்கென்று சமூக, பொருளாதார, அரசியலில் ஆழ்ந்த அறிவும், தெளிந்த சிந்தனையும் கொண்ட இனம் தமிழினம் என்பதை கால வரிசையில் வரலாறு பதிவு செய்திருக்கிறது. ஆங்கிலேய அரசுக்கெதிராக இம்மண்ணின் சுதந்திரத்திற்கான முதல் குரல் 1790 லேயே தமிழ் மண்ணில், நெற்கட்டான் செவலின் பூலித்தேவனின் உரிமைக்குரல் என்பதையும் அவரின் குரலைத் தொடர்ந்து இந்தியா ஓரணியில் திரண்டெழுந்து அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்ற வரலாற்றை நமது முதலமைச்சர் சமீபத்தில் சுட்டிக் காட்டினார்... அந்தப் போராட்டம் ஆங்கிலேயருக்கும், இந்தியர்களுக்கும் இடையேயானது, இப்போராட்டங்களின் விளைவாக விடுதலை தரும் எண்ணத்தில் 1910களில் ஆங்கிலேய அரசு தயாரான நேரத்தில் ஆரியம் மெல்ல தலை தூக்கியது... ஆரிய ஆதிக்கத்திலிருந்து இருந்து விடுதலைக்கான முதல் குரலும் தமிழகத்தில் இருந்துதான் எழுந்தது.

அந்தக் குரல் கேட்டு, சமூக விடுதலை வேட்கை கொண்டவர்கள் ஓரணியில் திரண்டபோதுதான் தென்னிந்திய நல உரிமை சங்கம் 20.11.1916ல் உதயமானது. அதுவே நீதிக் கட்சியாக மாறி தேர்தலில் வென்று, 1921ல் ஆட்சியமைத்த பிறகு, 'வகுப்பு வாரி பிரதிநிதித்துவம்' எனும் Communal G. O,'தேவதாசி முறை ஒழிப்பு','இந்தியாவில் முதன்முதலாக பெண்களுக்கு வாக்குரிமை',என்ற புரட்சிகர முன்னெடுப்பு களோடு 'இந்து கோயில் சொத்துகளை கபளீகரம் செய்து கொண்டிருந்த ஒருசாராரிடமிருந்து மீட்டெடுக்க அறநிலையத்துறை சட்டம்' என்று பல முனையில் ஆரியத்திடமிருந்து விடுதலைக்கு வழிகோலியது.

ஆனால், சுதந்திர இந்தியாவில் கோலோச்ச எத்தனித்த ஆரியம் உயர் மற்றும் உச்சநீதிமன்ற துணைக் கொண்டு, 'செண்பகம் துரைராஜன்' தொடுத்த விசித்திர வழக்கில் 80 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டை ரத்து செய்தது. இக்கொடுமை கண்டு பொங்கிய திராவிட இயக்கத்தின் பிதாமகன் தந்தை பெரியாரும், திராவிட அரசியலின் தத்துவ ஆசான் பேரறிஞர் அண்ணாவும் ஒருசேர குரல் கொடுத்து நியாயம் கேட்க, தமிழ் மக்கள் அதன் நியாயத்தை உணர்ந்து ஓரணியில் திரண்டு உரக்கக் குரல் கொடுத்ததன் விளைவாக, 12.5.1951ல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் முதன் முறையாக இடஒதுக்கீட்டிற்கு ஆதரவாகத் திருத்தப்பட்டது. ஆரியத்திடம் இழந்த உரிமைகள் திராவிடத்தால் மீட்கப்பட்டன.

**பேரா. ஜே. கான்ஸ்டன்டைன் ரவிந்திரன்**
கழக செய்தித் தொடர்பு செயலாளர்,
ஆசிரியர், The Rising Sun.



வடவர்கள் தங்கள் மொழியின் மேலாதிக்கத்தை இந்தியாவெங்கும் நிலைநாட்டும் பொருட்டு 1965ல், இந்தி மொழித் திணிப்பை, மும்மொழித் திட்டமாக முன்னெ டுத்த போது பேரறிஞர் அண்ணா, அவர்கள் 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை',என்ற புரட்சிக் கவிஞரின் வரிகளை எடுத்துக் காட்டியும், 'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை, மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை' என்ற பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் தாய்மொழியுணர்வை ஊட்டியும் மொழியைக் காக்கப் போராட்டக் களம் ஒன்றே தீர்வென்று முழங்கிய போது, மாணவர்கள், இளைஞர்கள், மொழிமான உணர்வுள்ள தமிழர்கள் என அனைவரும் ஓரணியில் திரண்டனர். இளைஞர்கள் பல பேர் தமது தேக்குமரத் தேகத்தை தீக்கிரையாக்கி, மொழிப் போர் தியாகிகளாய் தாய்மொழி காத்தனர். மும்மொழிக் கொள்கை ஒழிந்து,பேரறிஞர் அண்ணா ஆட்சியில் இருமொழிக் கொள்கையானது... 23.01.1968ல், சட்டமன்றத் தீர்மானமாக நிறைவேறி, ஆரிய மொழி ஏகாதிபத்தியத்தை திராவிடத் தாய்மொழி வென்றெடுத்தது.

இதன் தொடர்ச்சியாக 1980களில் சிங்களப் பேரினவாதம், தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களை ஒடுக்கி, இலங்கைத் தமிழர் உரிமைக் குரலை அடக்க எத்தனித்தபோது, 10.8.1983அன்று தலைவர் கலைஞரும், பேராசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகலில் துவங்கி பல்முனைப் போராட்டங்கள் நடத்தி இறுதியாக தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை முதல் குமரி வரை 11.11.1987அன்று தமிழ்நாடு முழுவதும் மனிதச் சங்கிலிப் போராட்டம் மூலமாக தமிழினத்திற்கான ஆதரவுக் குரலை ஓங்கியெழுப்ப வேண்டுகோள் விடுத்தபோது, தமிழ்நாடே ஓரணியில் திரண்டு இடையறுப்பு இல்லாத தொடர் சங்கிலியாக வடசென்னை முதல் தென்குமரி வரை அணி திரண்ட போராட்டம் வென்றபோது, கோஷ்டி சண்டைக்காரர்களாக பார்க்கப்பட்ட தமிழினப் போராளிகள், அன்றைய பிரதமர் இந்திரா காந்தியின் முயற்சியால் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழின விடுதலைப் போராளிகளாக அங்கீகரிக்கப்பட்டனர். இப்படி, காலம் காலமாக, ஆரியத்தின் ஆதிக்க முகம் எப்போதெல்லாம் தமிழினத்திற்கு எதிராக நிற்கிறதோ, அப்பொழுதெல்லாம் தமிழினம் ஓரணியில் திரண்டு வென்று காட்டிய வரலாறு நமக்கு உண்டு.

இன்றைக்கும் அந்த ஆரியத்தின் கோரமுகம் ஒன்றிய அரசு வாயிலாக தமிழினத்திற்கு எதிராக பல்வேறு சதித் திட்டங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது என்பது,'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் யாவரும் அறிந்ததே. குறிப்பாக, அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே, அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் மதச்சார்பற்ற (Secular)மற்றும் சமதர்ம (Socialistic)கோட்பாடுகளை நீக்க வேண்டும் என்று பாஜகவின் அதிகார மையமான ஆர்.எஸ்.எஸ். அழுத்தம் கொடுப்பதும்..,

கூட்டாட்சித் தத்துவத்தைக் காக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே, மாநிலப் பட்டியலில் உள்ள சட்டம் ஒழுங்கில் தலையிட NIA(National Investigation Agency Act)சட்டத் திருத்தம்,வேளாண்மையில் தலையிட கூட்டுறவுச் சங்க திருத்த சட்டம், வேளாண் சட்டங்கள் என்பனவற்றோடு கல்வி உரிமையை பறித்து காவி மயமாக்க தேசிய கல்விக் கொள்கை 2020இன் படி, தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையை விட்டு மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் கல்வி நிதி ஏறத்தாழ 2800 கோடி தருவேன் என்று சுமார் 42 லட்சம் மாணவர்களின் கல்விக்கனவை சிதைக்கும் ஒன்றிய அரசின் மிரட்டல்; அதோடு மாநிலத்துக்குள்ள ஜீவாதார உரிமையான வரி விதிக்கும் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்ள ஜிஎஸ்டி2017 எனும் சேவை மற்றும் சரக்குகள் வரி அறிமுகம், என கூட்டாட்சிக்கு எதிராக மாநில உரிமைகளை பறிப்பதும்..., எதிர்க்கட்சிகளை பலவந்தமாக பலவீனப்படுத்த அமலாக்கத் துறை வருமான வரித் துறை நீதித் துறை,தேசிய பாதுகாப்பு சட்டம் என எல்லா துறைகளையும் ஏவி விட்டு ஜனநாயகத்தை பாழ்படுத்திக்கொண்டே, ஜனநாயகத்தைக் காப்போம் என்று கூறுவதும்...,

இன்னொரு புறம், ஊடகத்துறையின் பங்குகளை அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி மிரட்டி தங்களுடைய ஆதரவாளர்களுக்கு மடை மாற்றம் செய்து பெரும்பாலான காட்சி ஊடகங்களில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொண்டு தாங்கள் விரும்பும் செய்தியை மட்டுமே வெளியிடச் செய்து எதிர்க்கட்சித் தலைவர்களின் கருத்துக்களை இருட்டடிப்பு செய்வது. பத்திரிக்கைத் துறையில் மறைமுகத் தணிக்கை செய்வது என்பன போன்ற செயல்களால் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்து; இதிலும் குறிப்பாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக, தங்களால் நியமிக்கப்படும் ஆளுநர்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் ஆளும் மாநிலங்களில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவதும்..., அதை அரசியலமைப்பின் பாதுகாவலரான உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டினால் 'உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை' என்று ஆணவத்தோடு குடியரசு துணைத் தலைவர் கண்டனம் தெரிவித்து கூட்டாட்சித் தத்துவத்தைக் காலில் போட்டு மிதித்து, 'தான்தான் எஜமானன்' என்ற மமதையில் நடந்து கொள்வதும்..., எல்லாவற்றுக்கும் மேலாக இங்கு ஒருவர் எந்த உணவு உண்பது, எந்த உடை உடுத்துவது, எந்த மதத்தைப் பின்பற்றுவது என்பதைக் கூட ஆளும் ஒன்றிய அரசுதான் முடிவு செய்யும் என்ற பாசிசத்தின் ஏகாதிபத்தியம் தமிழ்நாட்டின் வளர்ச்சியை மிகவே பாதிக்கிறது....

'தமிழர்களுக்கு எதிரான பா.ஜ.க.' என்ற ஆரியத்தின் கோரப் பிடியிலிருந்து தமிழ்நாட்டை காப்பதற்காக நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்திருக்கிற அறைகூவல் தான், 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற இலட்சிய முழக்கம். இதில் இனமானமுள்ள தமிழர்கள் எம் இனத்தின் தாய்மொழியை எம் மொழிக்கென்று இருக்கும் இந்த மண்ணை இந்தியாவிலே செழித்துச் சிறந்த எம் தமிழ்நாட்டை தண்ணீர் விட்டா வளர்த்தோம்?இல்லை மாறாக, எமது முன்னோர்கள் உடல் பொருள் ஆவி அனைத்தும் தந்து ரத்தம் சிந்திக் காத்த இந்த மண்ணை எம் மக்களை ஆரிய அந்நிய ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்று தீர்மானமாக தலைவர் மு.க.ஸ்டாலின் பின்னால் ஓரணியில்தமிழ்நாடு திரள்வது நிஜம். 2026ல் தலைவர் தலைமையில் தமிழினத்தின் வெற்றி வரலாறு தொடரும் என்பதே நிதர்சனம்!